## புளத்சிங்ஹள பிரதேச சபை

## களுத்துறை மாவட்டம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 27 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தோபர் 05 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து புளத்சிங்ஹள பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பிரதேச சபைக்குச் சொந்தமாகக் காணப்பட்ட காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மதுராவல பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 221,804 தொகையொன்று புளத்சிங்ஹள பிரதேச சபைக்குச் செலுத்த வேண்டியிருந்ததாக காண்பிக்கப்பட்டமையால், புளத்சிங்ஹள பிரதேச சபையின் கணக்குகளில் அது பெற வேண்டிய தொகையாகக் காண்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அது கணக்குகளில் மதுராவல பிரதேச சபைக்குச் செலுத்த வேண்டிய தொகையாக ரூபா 331,130 காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) 2017 அம் ஆண்டின் போது சபையினால் தயாரித்து பூர்த்திசெய்யப்பட்ட ரூபா 435,720 பெறுமதியான 11 மேசைகள் மற்றும் மேடை என்பவற்றை மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதனால் அப்பெறுமதியால் உரிய சொத்துக்கள் மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கு என்பன குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஈ) மோட்டார் வாகனமும் வண்டியும் கணக்கின் கீழ் சொத்தொன்றாக இனங்காணப்பட்ட ரூபா 54,865 பெறுமதியான 03 கழிவுப் பொருள் வண்டிகள், 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற ஏலவிற்பனைகளின் மூலம் பதிவேட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்த போதிலும், அதனை நிதிக்கூற்றுக்களிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2010 ஆம் ஆண்டில் நன்கொடையாகக் கிடைத்த பெறுமதி குறிப்பிடப்படாத நிலையான சொத்துப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட மற்றும் தற்போது பாவனையிலுள்ள உழவு

இயந்திரம் மற்றும் டோலரின் பெறுமதி என்பவற்றை கண்டறிந்து கணக்குகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) கூட்டுப் பெறுமதி ரூபா 10,720 தொகையான மின்குமிழ்கள், ஏனைய கொள்வனவுகள் மற்றும் பற்றறி என்பவற்றை உள்ளடங்கிய மூன்று இருப்பு விடயங்களை இனங்கண்டு நடைமுறைச் சொத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) நானாவித விடயங்களை உள்ளடக்கிய கூட்டுப்பெறுமதி ரூபா 28,735 தொகையான பொதுக் களஞ்சிய இருப்பு நடைமுறைச் சொத்தின் கீழ் குறைத்துக் காண்பிக்கப்பட்டமையால் நடைமுறைச் சொத்துக்கள் அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஏ) 2012 ஆம் ஆண்டின் போது கணக்கீடு செய்வதற்கு காரணங்கள் அவதானிக்கப்படாத ரூபா 199,090 தொகை திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் நடைமுறை வேலைகளுக்கான சிட்டையிடலாக ரூபா 16,848,511 தொகை அக்கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. எனினும், இந்த வரவு மற்றும் செலவு வைத்தல்களுக்குரிய மீள் எதிர்ப் பதிவு குறிப்புக்கள் மீளாய்வாண்டு வரையிலும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஐ) 2011 ஆம் ஆண்டில் நடைமுறை வேலைக்காக கிடைக்க வேண்டிய ரூபா 2,026,299 தொகை கடன்பட்டோர் கணக்கிற்கு மாத்திரம் வரவு வைக்கப்பட்டமையை சீராக்குவதற்காக 2012 ஆம் ஆண்டின் போது தொங்கல் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. இந்த தவறினால் கணக்குகளுக்கு ஏற்பட்டுள்ள தாக்கங்கள் மீளாய்வாண்டின் போதும் சரி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஒ) 2011 ஆம் ஆண்டில் வேலைக் கடன்பட்டோர் பதிவழித்தல் ரூபா 26,014,349 தொகையான வேலைக் கடன்பட்டோர் கணக்கிற்கு மாத்திரம் செலவு வைக்கப்பட்டமையை சரிசெய்வதற்காக 2012 ஆம் ஆண்டின் போது தொங்கல் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. இந்தத் தவறினால் கணக்குகளுக்கு ஏற்பட்டுள்ள தாக்கங்கள் மீளாய்வாண்டின் போதும் சரிசெய்யப்பட்டிருக்கவில்லை.

(ஓ) 2011 ஆம் ஆண்டில் வேலைக் கடன்கொடுத்தோர் ரூபா 29,600,825 தொகை அதிகரித்து சிட்டையிடப்பட்டமையை அகற்றுவதற்காக வேலைக் கடன்கொடுத்தோர் கணக்கு மாத்திரம் வரவுவைத்தலை சரிசெய்வதற்காக 2012 ஆம் ஆண்டின் போது தொங்கல் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. இந்தத் தவறினால் கணக்குகளுக்கு ஏற்பட்ட தாக்கங்கள் மீளாய்வாண்டின் போதும் சரிசெய்யப்பட்டிருக்கவில்லை.

(ஔ) 2012 ஆம் ஆண்டின் போது வேலைக் காசுக் கணக்கில் பொது நிதிக் கணக்கிற்கு ரூபா 2,600,000 தொகையை மாற்றும் போது உரிய கணக்குகளில் வரவு வைத்து மற்றும் செலவு வைக்கின்ற போது வருமான உதவிக் கணக்கும் செலவு வைக்கப்பட்டிருந்தது. இந்த தவறினால் கணக்குகளுக்கு ஏற்பட்டுள்ள தாக்கங்களை மீளாய்வாண்டின் போதும் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(க) 2011 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் கணக்கீட்டுக் குறைபாடுகளின் கீழ் (ஐ) பந்தியில் குறிப்பிடப்பட்ட ரூபா 470,407 தொகை வரவுப் பதிவு மாத்திரம் இடப்பட்டமையை மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் சரிசெய்யப்பட்டிருக்கவில்லை.

(கா) 2011 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையின் 2.2.4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட ரூபா 1,338,486 தொகையான கடன்கொடுத்தோர் மீதியை சரிசெய்தல் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் மூலமேனும் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நிலுவை ஆதன வரி மற்றும் ஏக்கர் வரி மீதிகள் ரூபா 1,115,474 ஆக இருந்த போதிலும், நிலுவை வருமான அறிக்கையின் பிரகாரம் அந்த மீதி ரூபா 1,162,430 ஆக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 46,956 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நிலுவையாகக் காணப்பட்ட வாடகை மீதி ரூபா 25,967 ஆக இருந்த போதிலும், நிலுவை வருமான அறிக்கையின் பிரகாரம் அவ்வாறான மீதியொன்று அவதானிக்கப்படவில்லை.

### 1.3.3 தொங்கல் கணக்குகள்

2017 சனவரி 01 இல் உள்ளவாறு ரூபா 116,297 தொகையான தொங்கல் கணக்கின் செலவு மீதி மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 857,690 செலவு மீதி வரை மேலும் அதிகரித்திருந்தது.

### 1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**பெறவேண்டிய கணக்குகள்**

நீண்ட காலமாகக் கொண்டுவரப்படுகின்ற வீதி விளக்கு உதவிகள் மற்றும் பெறுமதிசேர் வரியாகக் காணப்படுகின்ற முறையே ரூபா 114,070 தொகை மற்றும் ரூபா 410,901 தொகையான பெறவேண்டிய மீதி என்பவற்றை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 கணக்காய்விற்குத் சான்றுகள் இன்மை

வேலைப் பதிவேடு மற்றும் அதற்குரிய பட்டோலைகள் காணப்படாமையினால் ரூபா 462,532 கூட்டுத்தொகையான கடன்கொடுத்தோர் மீதிகளை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

### 1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 218 | - | சபைக்குச் சொந்தமான சகல காணி கட்டிடங்கள் ஒவ்வொரு வருடமும் ஒரு தடவையேனும் பரீட்சிப்பிற்கு உட்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| (i) | நிதிப்பிரமாணம் 371(இ) | 43,859 | எந்தவொரு பணிக்காகவும் வழங்கப்படுகின்ற முற்பணம் அந்தப் பணி நிறைவு பெற்றதும் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும், ரூபா 43,859 தொகையான முற்பண மீதி 2018 ஏப்ரல் 23 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 571 | 236,000 | 02 வருடங்களை விஞ்சிய ரூபா 236,000 தொகையான வைப்புக்களை வருமானத்தை எடுப்பதற்கோ அல்லது தீர்த்து வைப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம 1647 (ஆ) | - | சபைக்குச் சொந்தமாகக் காணப்படுகின்ற வாகனங்கள் மற்றும் அவற்றின் உபகரணங்கள் தொடர்பாக முழுமையான மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 2016/30 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | - | சபைக்குச் சொந்தமான வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,069,143 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,480,372 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானம் | 2017<br>மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2016<br>மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 3,453,767 | 3,299,717 | 2,669,707 | 980,244 | 3,447,880 | 3,320,487 | 4,083,565 | 596,282 |
| வாடகை | 4,760,000 | - | 785,470 | - | 3,400,000 | - | 771,355 | - |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 560,000 | 548,995 | 601,765 | - | 340,000 | 276,404 | 378,324 | - |
| ஏனைய வருமானம் | 21,520,000 | - | 25,702,009 | - | 20,235,000 | - | 19,922,711 | - |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

#### (அ) ஆதன வரி

(i) மீளாய்வாண்டில் ஆதன வரி சிட்டையிடல் ரூபா 2,052,880 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 1,231,285 தொகை அதாவது 59.9 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலுவை மீதியான ரூபா 446,162 தொகையில் ரூபா 208,846 தொகை அதாவது 46.81 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் ஆண்டின் இறுதியில் மொத்த நிலுவை ரூபா 1,058,911 ஆகும். இதன் பிரகாரம் மீளாய்வாண்டில் ஆதனவரி அறவிடலின் சதவீதம் 57.63 ஆகும்.

(iii) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,058,911 தொகையான நிலுவை ஆதனவரியில் 01 வருடம் முதல் 03 வருடங்கள் வரை 2249 அலகுகளிலிருந்து ரூபா 962,282 தொகை, 03 வருடம் முதல் 05 வருடங்கள் வரை 29 அலகுகளிலிருந்து ரூபா 53,871 தொகை மற்றும் 05 வருடங்கள் முதல் 10 வருடங்கள் வரை 22 அலகுகளிலிருந்து ரூபா 42,758 தொகையான நிலுவைகள் உள்ளடங்கியிருந்தது. இந்த நிலுவை பணத்தை அறவிடுவதற்கு சபை முறையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

#### (ஆ) ஏக்கர் வரி

(i) மீளாய்வாண்டில் ஏக்கர் வரி சிட்டையிடல் ரூபா 40,887 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 19,893 தொகை அதாவது 48.65 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலுவை மீதியான ரூபா 87,457 தொகையில் ரூபா 4,932 அதாவது 5.64 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் ஆண்டின் இறுதியில் மொத்த நிலுவை ரூபா 103,519 ஆக இருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் ஒட்டுமொத்த ஏக்கர் வரி அறவிடல் செயல்முன்னேற்றம் 19.34 சதவீத அளவாக இருந்தது.

**2.2.3 ஏனைய வருமானம்**

**(அ) அறிவித்தல் பதாதை வருமானம்**

1952 இன் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (அங்கீகரிக்கப்பட்ட உபவிதி) அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் எந்தவொரு அறிவித்தலையும் காட்சிப்படுத்தும் போது சபையின் செயலாளரினால் விநியோகிக்கப்படுகின்ற அனுமதிப்பத்திர அதிகாரத்தின் கீழ் மாத்திரம் காட்சிப்படுத்த முடியுமாக இருந்த போதிலும், அவ்வாறு அதிகாரம் பெறப்படாமல் அறிவித்தல் பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவ்வாறு அதிகாரம் பெற்றுக்கொள்ளாமல் 14 நிரந்தர அறிவித்தல் பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டமைக்காக ரூபா 47,008 தொகையொன்று அறவிட வேண்டியிருந்தது. 2017 ஆம் ஆண்டிற்கான விளம்பர அறிவித்தல்கள் தொடர்பாக மெய்மையாய்வும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) மோட்டார் வாகன நிறுத்திவைத்தல் கட்டணம்**

சபை அதிகாரப் பிரதேசத்தில் முச்சக்கர வண்டி நிறுத்தி வைக்கும் இடங்களில் நிறுத்தி வைக்கப்படுகின்ற முச்சக்கர வண்டிகளைப் பதிவு செய்து கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத்தரப்பினரிடமிருந்தும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,735,667 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 12,707,810 ஆகக் காணப்பட்டது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

சபையினால் 2017 ஆம் ஆண்டிற்காக அமுல்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட வேலைகள் தொடர்பான விபரங்கள் சபையினால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பாக சபைக்கு அறிவித்திருந்த போதிலும், அதற்குரிய பிரகாரம் செயற்திட்டங்கள் 2017 ஆம் ஆண்டில் தயாரித்து அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்**

(அ) புளத்சிங்ஹள பிரதேச சபை 2006 ஏப்ரல் 15 ஆந் திகதி முதல் புளத்சிங்ஹள மற்றும் மதுராவல என இரண்டு பிரதேச சபைகளாக பிரிக்கும் போது மதுராவல பிரதேச சபைக்கு உரித்தாக வேண்டிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பிரித்து ஒதுக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2018 மே 02 ஆந் திகதி வரையிலும் அந்த சொத்துக்களும், பொறுப்புக்களும் பகிர்ந்து ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற வீதி விளக்கு தூண்களை சரியாக கண்டறியக்கூடிய வகையில் இலக்கமிட்டு பேணிச்செல்வதற்கோ அல்லது சரியாக நாளதுவரையாக்கப்பட்ட ஏடுகளைப் பேணிச் செல்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

**(அ) ஊழியர் வெற்றிடம்**

(i) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட பதவியணியினர் விபரங்களின் பிரகாரம் சபையில் 02 ஆயுள் வேத வைத்தியர்கள், ஒரு நூலகப் பதவி, ஒரு வருமானப் பரிசோதகர், ஒரு முன்பள்ளி பாடசாலை ஆசிரியர், ஒரு வேலைப் பரிசோதகர், ஒரு சுகாதாரப் பரிசோதகர் பதவி, 02 சுகாதாரத் தொழிலாளி பதவி மற்றும் 02 வேலைத் தொழிலாளர்கள் பதவிகள் என்பன வெற்றிடமாகக் காணப்பட்டன.

(ii) சபையின் அங்கீகரிக்கப்பட்ட சாரதி பதவியணியில் 12 பேர் சேவையில் ஈடுபட்டிருக்கும் போது ஒரு வீதித் தொழிலாளர் மற்றும் மூன்று வேலைக்கள தொழிலாளிகள் சாரதி கடமைகளுக்காக நியமிக்கப்பட்டிருந்தனர்.

**(ஆ) ஊழியர் கடன்**

சேவையை விட்டுச் சென்ற, மரணமடைந்த மற்றும் ஓய்வு பெற்றுச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 78,702 தொகையான கடன் மீதி 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை**

(அ) சபை அதிகாரப் பிரதேசத்திற்குரியதாக 36 மயான நிலங்கள் காணப்பட்டதுடன், அவற்றை வர்த்தமானியில் பிரசுரித்து சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அதில் 06 மயான நிலங்கள் மாத்திரம் அளவை நடவடிக்கைகள் செய்யப்பட்டிருந்தது. மேலும் சட்டரீதியாக கையேற்கப்படாமையின் காரணமாக சபைக்குச் சொந்தமான அனேகமான மயான நிலங்கள் வெளித்தரப்பினரால் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தது.

(ஆ) சபைக்குச் சொந்தமான வீதிகளை சரியாக இனங்காண்பதற்கும், பதிவேடுகளுக்கு கொண்டு வருவதற்கும் மற்றும் வர்த்தமானியில் பிரசுரித்து காணப்படுகின்ற பதிவேடுகளை நாளதுவரையாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4.2 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

(அ) சபையினால் ரூபா 35,399,870 தொகை செலவில் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட புதிய சந்தைக்கட்டிடத் தொகுதி 2018 மே 03 ஆந் திகதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் காணப்பட்டது. மேலும், இக்கட்டிடம் சரியாக அங்கீகரிக்கப்பட்ட கட்டிட வரைபடத் திட்டமின்றி நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

(ஆ) சபையினால் இதற்கு பல வருடகாலத்திற்கு முன்னர் வாகன பராமரிப்பு மற்றும் சேர்விஸ் அலகொன்று மீகஹகும்புற பிரதேசத்தில் அமைக்கப்பட்டிருந்ததுடன் இந்த பிரிவுடன் உள்ள காணி சபைக்குச் சொந்தமாகக் காணப்படவில்லை. அந்தக்காணியை சபைக்கு கையேற்பதற்கோ அல்லது சொத்தொன்றாக இனங்காண்பதற்கோ எவ்வித நடவடிக்கைகளும் சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்குரியதாக ரூபா 500,000 வீதம் வருமான மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், 2018 சனவரி 23 ஆந் திகதி வரையிலும் இந்த நிலையத்தில் சேர்விஸ் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் இந்த நிலையத்தை செயற்படுத்துவதற்காக ரூபா 73,350 தொகையில் பெறப்பட்ட உபகரணங்கள் நீண்டகாலமாக நிலையத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

**3.4.3 வாகனப் பயன்பாடு**

(அ) கெப் வண்டி மற்றும் 02 உழவு இயந்திரங்கள் என்பன பல வருட காலமாக ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்ததுடன், பழுதுபார்ப்பதற்கோ அல்லது வேறு பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்கோ 2018 யூலை 24 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான பயன்பாட்டிற்கு எடுக்கப்படுகின்ற 15 வாகனங்களில் 11 வாகனங்களுக்கும் மூன்றாம் தரப்பினர் காப்புறுதி மேவுகை மாத்திரம் பெறப்பட்டிருந்தது.

(இ) சபைக்குச் சொந்தமான அனேகமான வாகனங்களின் பழுதுபார்த்தல்கள் சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அந்த பழுதுபார்த்தலின் பின்னர் கழற்றி அகற்றப்பட்ட உதிரிப்பாகங்கள் தொடர்பாக சரியான கட்டுப்பாடொன்று இடம்பெற்றிருக்கவில்லை.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

(அ) மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானத்திற்கும் செலவினத்திற்குமிடையே கவனத்தில் கொள்ளக்கூடிய முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியான பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 06 வருமான விடயங்களில் ரூபா 5,060,000 தொகையான வருமானமொன்றை ஆண்டின் போது உழைத்துக் கொள்வதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் போது அதில் எந்தவொரு தொகையையும் உழைத்துக் கொள்ள முடியாதிருந்தது.

**4.2 உள்ளகக் கட்டுப்பாடு**

உள்ளகக் கணக்காய்வாளரை நியமித்து உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுகள் தொடர்பான கண்ககாய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கீழே குறிப்பிடப்படுகின்ற கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| முறைமைகள் | | குறைபாடுகள் |
|---|---|---|
| (அ) கணக்கீடு | | பதிவேடுகள் நாளதுவரையாகப் பேணப்படாமை. |
| (ஆ) வருமான நிர்வாகம் | (i) | நிலுவை வருமானம் அறவிடப்படாமை |
| | (ii) | அறிவித்தல் பதாதை மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணம் போன்ற வருமானங்களை சரியாக இனங்காண்பதற்குரிய முறையான மெய்மையாய்வு நடாத்தப்படாமை |
| (இ) பாதீடு | (i) | பாதீட்டு முரண் வீச்சு அதிகமாக இருந்தமை. |
| | (ii) | வருமானத்தை மதிப்பீடு செய்த போது அது சாத்தியமான வகையில் மேற்கொள்ளப்படாமை. |
| (ஈ) களஞ்சியக் கட்டுப்பாடு | (i) | பதிவேடுகளை முறையான பிரகாரம் நாளதுவரையாகப் பேணப்படாமை. |
| | (ii) | வாகனங்களின் உடைந்த பொருட்கள் தொடர்பாக பதிவேடு பேணப்படாமை. |
| (உ) ஊழியர் முகாமைத்துவம் | (i) | சரியான முறைமையின் கீழ் வீதி மற்றும் களத்தொழிலாளர்கள் சேவையில் ஈடுபடுத்தப்படாமை |
| | (ii) | ஊழியர்களின் கடமை மேற்பார்வை நலிவான நிலையில் காணப்பட்டமை. |